| |
|---|
| **மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இராதாபுரம்.** |
| **முன்னிலை : திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,** |
| **மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.** |
| **2026-ம் ஆண்டு ஜீன் திங்கள் 05-ஆம் நாள் வெள்ளிக்கிழமை** |
| **சுருக்கு விசாரணை வழக்கு எண். 914/2025** |
| **CNR No. TNTL260045302025** |

| | |
|---|---|
| அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>இராதாபுரம் காவல் நிலையம்<br>குற்ற எண் 176/2025. | **... குற்றமுறையீட்டாளர்** |
| **/எதிர்/** | |
| அஜித், வயது 29/2025,<br>த/பெ. ராமர்,<br>1/48, தெற்கு தெரு,<br>வட்டவிளை,<br>உதயத்தூர். | **... குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

**இராதாபுரம்** காவல் நிலையம் **176/2025** குற்ற எண்ணில் **சட்டப்பிரிவு 24(1) COTPA Act** ன் கீழ் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையின் மீது இந்நீதிமன்றமானது கவனமாக பரிசிலினை செய்து பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

1) **<u>Gist of prosection case</u>**:

கடந்த 30.03.2025 ம் தேதி 21.00 மணிக்கு இராதாபுரம் JK சூப்பர் மார்கெட் பின்புறம் உள்ள எதிரி நடத்தி வரும் பெட்டிக்கடையில் அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 15 கிராம் எடையுள்ள Ganesh 701 TOBACCO என்று எழுதப்பட்ட 15 எண்ணம் கொண்ட புகையிலை பாக்கெட்டுகள் 21 (21x15=315) மற்றும் 12.6 கிராம் எடையுள்ள Cool Lip Filter Tobacco என்று எழுதப்பட்ட 8 எண்ணம் கொண்ட புகையிலை பாக்கெட்டுகள் 2 (2x8=16) மற்றும் 12.6 கிராம் எடையுள்ள Cool Lip Filter Tobacco என்று எழுதப்பட்ட புகையிலை பாக்கெட்டுகள் 4 எண்ணம் (மொத்தம் 16+4 =20) வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக இராதாபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது **சட்டப்பிரிவு 24(1) COTPA Act** ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **<u>Point for Consideration</u>**:

இவ்வழக்கானது கு.வி.மு.ச. பிரிவு 258 ன் படி முடித்து வைக்க வேண்டிய வழக்கா என்பதை தீர்மானிக்க வேண்டிய பொருண்மை ஆகும். இவ்வழக்கில் சங்கதிகளை பரிசிலிப்பதற்கு முன்பாக கு.வி.மு.ச. பிரிவு 258 ஐ இந்நீதிமன்றம் கவனித்தில் கொள்ள முற்கொள்கிறது. குவிமுச பிரிவு 258 கீழ்கண்ட வாறு கூறுகிறது. அதாவது ,

3) **<u>Section 281 of BNSS:</u>**

> *In any summons case instituted otherwise than upon complaint, a Magistrate of the first class or, with the previous sanction of the Chief Judicial Magistrate, any other Judicial Magistrate, may, for reasons to be recorded by him, stop the proceedings at any stage*

*without pronouncing any judgment and where such stoppage of proceedings is made after the evidence of the principal witnesses has been recorded, pronounce a judgment of acquittal, and in any other case, release the accused, and such release shall have the effect of discharge.*

4)**Ingredients:**

மேற்படி சட்டப்பிரிவின் படி காவல் அறிக்கையின் பெயரில் தொடங்கப்பட்ட அழைப்பாணை வழக்குகளில் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுத்துப்பூர்வமான காரணங்களை பதிவு செய்து, நிலுவையில் உள்ள அழைப்பாணை வழக்குகளை நிறுத்தம் செய்ய உத்தரவிடலாம் என்று கூறுகிறது.

மேற்படி சட்டப்பிரிவை பயன்படுத்த வேண்டுமென்றால் கீழ்கண்ட உட்கூறுகள் பின்பற்ற வேண்டும் என்று கூறுகிறது. அதாவது,

1) காவல் அறிக்கையின் பெயரில் தொடங்கப்பட்ட வழக்காக இருக்கவேண்டும்.

2) அழைப்பாணை வழக்காக இருக்க வேண்டும்.

3) சிறப்பு காரணங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்ய வேண்டும்.

5) **Cases Instituted upon Police Report:**

மேற்படி உட்கூறுகள் இவ்வழக்கிற்கு பொருந்துகிறதா என்று இந்நீதிமன்றம் கவனமாக பரிசிலினை செய்ததில் இந்த வழக்கானது **இராதாபுரம்** காவல் நிலையத்தில் **176/2025** குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட காவல் அறிக்கையின் பெயரில் தொடரப்பட்ட வழக்காகும். என்பது தெளிவாகிறது.

6) **Summons Case:**

அதுபோல இந்த வழக்கானது **சட்டப்பிரிவு 24(1) COTPA Ac** ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்காகும். மேற்படி சட்டப்பிரிவு மூன்று மாதங்கள் வரை தண்டிக்கப்படக்குடிய குற்றங்கள் ஆகும். எனவே மேற்படி சட்டப்பிரிவு அழைப்பாணை வழக்கு என்பது தெளிவாகிறது.

7) **Special Reason:**

இந்த வழக்கானது **30/03/2025** தேதி அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது ஆகும். **20/08/2025** தேதி அன்று வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கானது **05/06/2026** தேதி இன்று வரை நிலுவையில் இருந்து வருகிறது. இவ்வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் தொடர்ச்சியாக நிலுவையில் இருந்து வருகிறது என்பது தெளிவாகிறது.

8) **Order:**

இவ்வழக்கு **இராதாபுரம்** காவல்நிலையத்தில் **176/2025** குற்ற எண்ணில் **சட்டப் சட்டப்பிரிவு 24(1) COTPA Act** ன் தொடரப்பட்ட காவல் அறிக்கையின் பெயரிலான அழைப்பாணை வழக்கின் விசாரணை ஆனது குவிமுச பிரிவு 258 / 281 BNSS ன் படி நிறுத்திவைக்க உத்தரவிட்டும் அதன் விளைவாக எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

9) **Order as to case property:**

வழக்கு சொத்துக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் ஜீன் மாதம் 05 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.05 15:41:19 +0530

**மாவட்ட உரிமையியல் (ம)**

**நீதித்துறை நடுவர்,இராதாபுரம்.**